# ஈரோட்டில் இந்தி எதிர்ப்பு நாள்.

## பிரம்மாண்டமான கறுப்புக் கொடி ஊர்வலம்.

### கடைகள் மூடப்பட்டன.

### லக்ஷ்மிரதன் பாரதியார் முழக்கம்.

### ஈ. வெ. ரா. வீரகர்ஜனை.

(ஒரு நிருபர்)

ஈரோடு, ஜூலை 2:

தமிழ் மாகாண தமிழர் சங்கக் காரியதரிசி தோழர் கெ. எ. பி விஸ்வநாதம் அவர்கள் ஜூலை மாதம் 1ந்தேதி வெள்ளிக்கிழமையன்று "இந்தி எதிர்ப்பு தினம்" கொண்டாடி, ஊர்வலங்கள் நடத்தி இந்தியைக் கண்டித்தும், அடக்கு முறைகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் செய்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தீர்மானங்களை அனுப்பவேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்ததின் பேரில் இவ்வூர் முஸ்லிம்லீக் முஸ்லிம் வாலிபர் சங்கம், கிறிஸ்தவ வாலிபர் சங்கம், தாழ்த்தப்பட்டோர் நல உரிமைச்சங்கம், பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம், மருத்துவகுல சங்கம், திராவிடர் கழகம், கார்காத்த வேளாள வாலிபர் சங்கம், பீடித்தொழிலாளர், இந்திஎதிர்ப்புக் கமிட்டி, ஆகிய சங்கங்களின் சார்பில் இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த சங்கங்களின் வேண்டுகோள்களுக்கிணங்கி இவ்வூர் கடைகள் யாவும் மூடப்பட்டன.

#### கறுப்புக்கொடி ஊர்வலம்.

சரியாக 3-30 மணிக்கு இவ்வூர் இந்தி எதிர்ப்பு நிலையத்திலிருந்து ஒரு இந்தி எதிர்ப்பு ஊர்வலம் கறுப்புக்கொடிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஊர்வலத்தில் ஏராளமான ஜனங்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலம் நகரின் பலமுக்கிய தெருக்களுக்குச் சென்று சரியாக 6-30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும் காரைவாய்க்கால் மைதானத்திற்கு வந்து சேர்ந்தது.

இந்த ஊர்வலம் இந்த ஊர் மாஜி முனிசிபல் கௌன்சிலரும், பிரபலஸ்தருமான தோழர் ஈ. வி. சி. முத்துசாமிக் கவுண்டர், தோழர் ஹெய்ச் பாக்ஷா சாயபு, தோழர் எம். கே. ஜராக் சாயபு, தொண்டர்கள் காப்டன் தோழர்கள் ஆரோக்கியசாமி, எம். பழனியப்பா, காளிதாஸ் முதலியவர்கள் தலைமையில் மிகஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற்றது.

ஊர்வலம் முஸ்லிம்லீக்கட்டிடத்திற்குப் பக்கத்தில் வந்ததும் லீக்கின் சார்பாக ஏற்கனவே தயாராக கறுப்புக் கொடிகளுடன் இருந்த தொண்டர்களும் ஊர்வலத்துடன் சேர்ந்து கொண்டார்கள்.

#### பொதுக்கூட்டம்.

சரியாக 6-30 மணிக்குப் பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது.

தோழர் காளிதாஸ் அவர்கள் தமிழ் தேவகள் பாடினார்கள்.

பின் கூட்டத்திற்கு இவ்வூர் பிரபல டாக்டர் கி. இ. டேவிட் அவர்கள் தலைமை வகித்து இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாட வேண்டிய அவசியத்தைப்பற்றியும் தமிழர்கள் ஒன்று சேர வேண்டியதைப் பற்றியும் பேசிய பின் தோழர் எஸ். எஸ். ஆரோக்கியசாமி அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். பின் தோழர் ஆரோக்கியசாமி அவர்கள் இந்தி வரும் சூழ்ச்சியைப் பற்றியும், அதை எதிர்க்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் மிக உணர்ச்சி ததும்பப் பேசினார்.

பின் தேவகோட்டை வக்கீல் தோழர் எஸ். லஷ்மிரதன் பாரதியார் எம். ஏ. பி. எல், அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து காங்கரஸ் காரர்கள் தேர்தல் பிரசாரம் செய்து ஓட்டுப் பெற்ற விதம், பின் மந்திரி பதவி ஏற்றதும் அவர்கள் செய்து வரும் வேலைகள், இந்தி கொண்டு வருவதன் சூழ்ச்சி, இந்தி கொண்டு வருவதாக எந்தக் காங்கரசோ, காரியக்கமிட்டியோ தீர்மானமௌதுவும்செய்யவில்லையென்றும், ஆச்சாரியார் பேச்சில் கூறும் சமாதானங்களைப் பற்றியும், கிரிமினல் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதைக் கண்டித்தும் மிக உணர்ச்சிததும்ப மிகவிளக்கமாகப் பேசினார்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து இந்தி எதிர்ப்பு விஷயமாக நடந்து வரும் வேலையைப்பற்றியும், ஆச்சாரியார் மந்திரிசபை செய்யும் அடக்கு முறைகளைப் பற்றியும், இந்தி எதிர்ப்புக்காரர்களைக் கண்டிக்கும்விதத்தைப்பற்றியும்கிரிமினல் திருத்தச் சட்டத்தை ஒழிக்கும் வீரர்கள் அதையே உபயோகப் படுத்தும் விதத்தைப் பற்றியும், இதுவரை யாரும் உபயோகப் படுத்தாத அந்த சட்டத்தை இவர்கள் உபயோகப்படுத்துவதைப்பற்றியும் மிக விளக்கமாகவும், உணர்ச்சி ததும்பும்படியும் பேசினார். பின் இந்தியைக் கண்டித்தும், அடக்கு முறையைக்கண்டித்தும் இரண்டு தீர்மானங்கள் நிறைவேறின. அடக்குமுறையைக் கண்டித்துப் போட்ட தீர்மானத்தை எதிர்த்து 4 காங்கரஸ் காரர்கள் ஓட்டுச் செய்தார்கள்.

பின் தோழர் பி. ஷண்முக வேலாயுதம் பேசியபின் தலைவர் முடிவுரை கூறியதும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இந்தக் கூட்டத்திற்கு 2000 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர் லக்ஷமிரதன் பாரதியார் இரவே தேவகோட்டை சென்று விட்டார்.

---

## துறையூர் பஞ்சாயத்து போர்டு தேர்தல்.

### காங்கரஸ் தலைவருக்கு படுதோல்வி.

(நமது நிருபர்)

துறையூர், ஜூன் 29

ஷை தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் பெயர்கள் அறிவிக்கப் பட்டு விட்டன.

இவ்வூர் காங்கரஸ் கமிட்டித் தலைவர், உபதலைவர், மெம்பர் ஆகியவர்கள் படுதோல்வி அடைந்தனர். சுயமரியாதைச் சங்கத் தலைவர் டி. எம். கிருட்டிணசாமி, டி. எம். லிங்கையா, பி. குமாரசாமி, செல்லமுத்து வாத்தியார், சுந்தரமூர்த்திஉடையார் (சு. ம. தோழர்) ஆகியவர்கள் வெற்றி பெற்றார்கள்.